# ஆகஸ்ட்– 03 – வெள்ளி

**புனித ஹோப்**

**ஏனெனில், உம் பொருட்டே நான் இழிவை ஏற்றேன்:**

**திபா. 69:7**

## முதல் வாசகம்: ஏரேமியா26 : 1 – 9

யோசியாவின் மகனும் யூதாவின் அரசனுமான யோயாக்கிமுடைய ஆட்சியின் தொடக்கத்தில் ஆண்டவர் அருளியவாக்கு: "ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார் "நீ ஆண்டவர் இல்லத்தின் முற்றத்தில் நின்று கொண்டு, அங்கு வழிபாடு செலுத்தவரும் யூதாவின் எல்லா நகரினர்க்கும் சொல்லுமாறு நான் உனக்குக் கட்டளையிடும் எல்லாச் சொற்களையும் நீ அவர்களுக்கு அறிவி அவற்றில் ஒன்றையும் விட்டுவிடாதே. ஒருவேளை அவர்கள் உனக்குச் செவிசாய்த்து அவரவர் தம் தீயவழிகளை விட்டுத்திரும்பலாம். அப்பொழுது அவர்களுடைய தீச்செயல்களை முன்னிட்டு அவர்களுக்கு நான் அளிக்க எண்ணியுள்ள தண்டனை பற்றி என் மனத்தை மாற்றிக்கொள்வேன்". நீ அவர்களிடம் சொல்லவேண்டியது: "ஆண்டவர் கூறுவது இதுவே. நீங்கள் எனக்குச் செவிகொடாமலும், உங்களுக்குக் கொடுத்திருக்கும் என் சட்டத்தின்படி நடவாமலும், நீங்கள் செவிசாய்க்காதபொழுதும் நான் மீண்டும் மீண்டும் உங்களிடம் அனுப்பி வைக்கும் என் ஊழியர்களான இறைவாக்கினர்களுடைய சொற்களைக் கேளாமலும் இருப்பீர்களாகில், இக்கோவிலைச் சீலோவைப் போல் ஆக்குவேன் இந்நகரை உலகில் எல்லா மக்களினத்தார் நடுவிலும் சாபக்குறியாக மாற்றுவேன்.". ஆண்டவர் இல்லத்தில் எரேமியா உரைத்த இச்சொற்களைக் குருக்களும் இறைவாக்கினரும் மக்கள் அனைவரும் கேட்டனர். மக்கள் அனைவருக்கும் சொல்லும்படி ஆண்டவர் கட்டளையிட்டிருந்த எல்லாவற்றையும் எரேமியா கூறிமுடித்தபோது, குருக்களும் இறைவாக்கினரும் மக்கள் அனைவரும் அவரைப் பிடித்து, "நீ கண்டிப்பாய்ச் சாகவேண்டும்" என்று கூச்சலிட்டனர். "இக்கோவில் சீலோவைப் போல் மாறும் இந்நகர் குடியிருப்பாரற்றுப் பாழாய்ப்போகும் என்று ஆண்டவரின் பெயரால் நீ ஏன் இறைவாக்கு உரைத்தாய்?" என்று கூறி, ஆண்டவர் இல்லத்திலேயே மக்கள் எல்லாரும் ஏரேமியாவைச் சூழ்ந்து கொண்டனர்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம் பேரன்பினால் எனக்குப்
பதில் மொழி தாரும்.

## நற்செய்தி : மத்தேயு 13 : 54 - 58

அக்காலத்தில் இயேசு தமது சொந்த ஊருக்கு வந்து அங்குள்ள தொழுகைக் கூடத்தில் அவர்களுக்குக் கற்பித்தார். அதைக் கேட்டவர்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள். அவர்கள், "எங்கிருந்து இந்த ஞானம் இவருக்கு வந்தது? எப்படி இந்த வல்ல செயல்களைச் செய்கிறார்? இவர் தச்சருடைய மகன் அல்லவா? இவருடைய தாய் மரியா என்பவர்தானே? யாக்கோப்பு, யோசேப்பு, சீமோன், யூதா ஆகியோர் இவருடைய சகோதரர் அல்லவா?. இவர் சகோதரிகள் எல்லாரும் நம்மோடு இருக்கிறார்கள் அல்லவா? பின் இவருக்கு இவையெல்லாம் எங்கிருந்து வந்தன?" என்றார்கள்.இவ்வாறு அவரை ஏற்றுக்கொள்ள அவர்கள் தயங்கினார்கள்.இயேசு அவர்களிடம், "தம் சொந்த ஊரிலும் வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினர் மதிப்புப் பெறுவர்" என்றார்.அவர்களுக்கு நம்பிக்கை இல்லாததால் அவர் அங்குப் பல வல்ல செயல்களைச் செய்யவில்லை.

**தியானம்:** இன்றைய நற்செய்தியானது ஒரு மனிதனை நாம் எதை வைத்து மதிக்கிறோம் அல்லது இகழ்கின்றோம் என்பது குறித்து சிந்திக்க நமக்கு அழைப்பு விடுகிறது .ஒரு மனிதனை மூன்று காரியங்கள் அடிப்படையில் நாம் மதிக்கலாம் அல்லது இகழலாம்.

1.ஒருவர் வைத்திருப்பவற்றிற்காக : ஒரு மனிதன் பணம், பொருள், வசதிகள் ஆகியவற்றை வைத்திருக்கின்றார் என்பதற்காக அவரை மதிப்பது இதில் குடும்பப் பின்னணியும் அடங்கும். அதாவது ஒரு நல்ல போற்றுதற்குரிய பின்னணியிலிருந்து வந்திருக்கின்றார் என்பதற்காக ஒருவரை மதிப்பது இவற்றில் ஏதாவது குறைகள் இருந்தால் அவரை இகழ்வது.

2.ஒருவரது செயல்களுக்காக: ஒரு மனிதனின் நற்செயல்களை அடையாளம் கண்டு கொண்டு அதற்காக அவரை மதிப்பது, கடின உழைப்பு விடா முயற்சி போன்றவற்றால் அற்புதமாக சாதித்திருக்கின்றார் என்பதற்காகவும், பிறருக்கு உதவி செய்கின்ற குணத்தின் காரணமாக பலருடைய வாழ்வை முன்னேற்றி விட்டிருக்கின்றார் என்பதற்காகவும் அவரை மதிப்பது

3.ஒருவரது இயல்புக்காக: ஒரு மனிதனது குண நலன்கள், பண்புகள், நல்லவைகள் ஆகியவற்றை அடையாளம் கண்டு கொண்டு அவற்றிற்காக அவரை மதிப்பது.

இவற்றில் முதல் காரணத்தை மட்டும் வைத்து ஒரு மனிதனை மதிப்பதோ அல்லது இகழ்வதோ எவ்வளவு மோசமானது, பாதகமானது என்பதை நற்செய்தி சுட்டிக்காட்டுகிறது. இங்கு பாதிப்பு நிராகரிக்கப்பட்டவருக்கு அல்ல, மாறாக நிராகரித்தவர்களுக்கு கூர்ந்து கவனிக்கப் பட வேண்டிய விசயம். தம் சொந்த ஊராகிய நாசரேத்தூரிலுள்ள தொழுகைக்கூடத்தில் நிராகரிக்கப்பட்டதன் காரணமாக தொழுகைக்கூடத்தில் நுழைவதையே இயேசு நிறுத்திவிடுவதைப் பார்க்கிறோம். சிறிதும் பயனற்றவர்களைக்கூட நாம் எவ்வளவு தூரத்திற்கு மதிக்கிறோம் என்பதில் தான் நம் உண்மையான மனிதத்தன்மை அடங்கியிருக்கிறது, என்பதை இன்றைய நற்செய்தியின் மூலம் நாம் தியானிப்போம்